2017 ஜூன் 20] [*திரு. அர. சக்கரபாணி*]

மற்றும் தசை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு மாதம் ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1,000/- தான் வழங்கப்பட்டு வருகிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து வரவிருக்கின்ற சமூக நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீதான பதிலுரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, நல்ல அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கைகளுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்போது பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். அதோடு விட்டுவிடுங்கள்.*

பிற்பகல் 12-05

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) மாட்டிறைச்சி குறித்து மத்திய அரசு வெளியிட்ட விதிகளுக்கு எதிராக சிறப்புத் தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் மாட்டிறைச்சி சம்பந்தமாகப் பேசுகின்றபோது, ** உணவாக மாட்டிறைச்சி இருக்கிறது என்று குறிப்பாகப் பேசினார். ஒரு குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிடுவது போல் அவர் பேசியது இருக்கிறது. எனவே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார்கள் என்று சொல்லுங்கள், அதில் ஒன்றும் பிரச்சினையில்லை.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*